அசல்

7.3.35. அ.மு. பரமசிவானந்தம்

உ

Replied 17.3.35

திருச்சிற்றம்பலம்.

இந்து மத பாடசாலை.
வாலாஜாபாத்!
7.3.35

தமிழ் அன்னையைக் கைதூக்கிவிட்ட தயாள!

வணக்கம் பல. நலன். விழைவு.

தங்கள் எண்பதாம் ஆண்டு நிறை விழாவைக் கொண்டாட இந்தப் பாடசாலையில் உள்ள கழகத்தின் சார்பாக ஒர் சிறப்புக் கூட்டம் கூட்டி எம் மகிழ்ச்சியை ஒன்று கூடிப் பெற்றோம். அச்சபை பொலிய நடம்புரியும் செல்வன் இணையடியை யேத்திப் பன்னாள் இப்பாரில் தாங்கள் ஏங்கி நின்ற தமிழ் தாய்க்கு ஆதரவாய் இருக்க வேண்டுமென்று நாங்கள் யாவரும் வேண்டிக் கொண்டோம்.

தங்கட்கு நேரில் ஒர் வாழ்த்துப் பா வாசித்துக் கொடுக்க சமய இல்லையாயினும் எங்கள் அவையில் ஒர் வாழ்த்துப் பாவைப் பாடி இன்புற்றோம். அதையும் இத்துடன் அனுப்புகின்றோம்.

தவிர, பெரியீர் பாதங்கட்கு நான் வணக்கமாய் எழுதிக் கொள்ளுகின்றேன். தங்கள் 80.ம் ஆண்டு நிறை விழாவை அங்கு வந்து காணக் கொடுத்துவைக்காவிட்டாலும் இங்கு நடந்த கூட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ள நேர்ந்த பாக்யத்தை நினைத்துப் பெருமகிழ்ச்சி அளிக்க அகமகிழ்கின்றேன். தங்கள் பன்னாள் வாழ்ந்து பழந்தமிழ்க்கு உதவிபுரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்.

தங்கள் கீழ்ப்படிதலுள்ள

அ.மு. பரமசிவானந்தம்

அசல்